Dettol BANEGA SWASTH INDIA HARPIC

இந்து தமிழ் திசை

சுத்தம் சுகாதாரம்

விழிப்புணர்வுத் தொடர்

Implemented by Gramalaya® Water, Sanitation and Hygiene for all

பகுதி - 4

நிலை –4: நோய்வாய்ப்பட்டிருக்கும்போது சுத்தம்

1 எங்கும் கிருமிகள்

1. நாம் அன்றாடம் செல்லும் பல இடங்களிலும் கிருமிகள் உள்ளன. கிருமிகள் பரவுவதைத் தடுக்கும் வகையில் நீங்கள் மேற்கொள்ளும் செயல்பாட்டிற்கு எதிரேயுள்ள கட்டத்தில் 'டிக்' (✔) குறியீட்டைப் போடவும். செய்யக்கூடாத செயல்பாட்டிற்கு 'கிராஸ்' (✘) குறியீட்டைப் போடவும்.

A. சந்தையில் பொருள்களைத் தொடாமலிருத்தல் ☐

B. இருமும்போது முகத்தை துணியால் மூடிக்கொள்ளுதல் ☐

C. வீடு திரும்பியதும் முகம் கைகளைக் கழுவுதல் ☐

D. சந்தையில் ஸ்பூன் கொண்டு சாப்பிடுதல் ☐

E. பொது இடங்களில் ரைலிங்குகள், கைப்பிடிகளை தொடாமலிருத்தல் ☐

2 கிருமிகள் பரவுதல்

1. கீழுள்ள படத்தைப் பாருங்கள். அதில் பல இடங்களில் கிருமிகள், ஈக்கள் மற்றும் கொசுக்கள் காணப்படுகின்றன. உங்கள் பார்வையில் கிருமிகள், ஈக்கள், கொசுக்கள் உள்ள இடங்களை மட்டும் நீல வண்ணமிட்டுக் காட்டுங்களேன்.



2. கிருமிகள் பரவுவதைப் பற்றி நாம் ஏன் அறிந்திருக்க வேண்டும் என்பதற்கான காரணத்தை இரண்டு வரிகளில் எழுதுங்கள். இத்துடன் உள்ள உதவிப்பெட்டியில் உள்ள சொற்களைப் பயன்படுத்திக் கொள்ளவும்.

கொசுக்கள்	நோய்	விழுதல்	ஈக்கள்	கிருமிகள்	தடுத்தல்

.....

.....

3 இருமுதல் மற்றும் தும்முதல்

1. ஒரு குடும்பத்தினர் அனைவரும் ஒன்றாக அமர்ந்து சாப்பிட்டுக் கொண்டிருக்கின்றனர். இங்கு நடக்கும் ஒரு செயலால், இனி அடுத்து என்ன நடக்கும் என்பதை கீழே எழுதுங்கள். உதவிக்கு கீழுள்ள உதவிப்பெட்டியில் உள்ள சொற்களைப் பயன்படுத்துக.




குடும்பம்	உணவு	கிருமிகள்	இருமுதல்	நோய்	பரவுதல்	சாப்பிடுதல்

.....

.....

20 விநாடிகளுக்கு கை கழுவும் முறை





கீழே கேட்கப்படும் சுகாதார கேள்விகளுக்கான சரியான பதில்களைச் சொல்லும் முதல்100 குழந்தைகளுக்குப் பரிசுகள் காத்திருக்கின்றன.


அன்புக்குழந்தைகளே..!

நாம் சுத்தமாக இருந்தால், நோய் கிருமி நம்மை நெருங்காது. நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம். ஆரோக்கியமாக வாழ வேண்டும் என்றால் நாம் சுத்தமாக இருக்க வேண்டியது மிகவும் அவசியம்.

எப்போதும் கைகளைச் சுத்தமாக வைத்திருப்போம். தினமும் பல் தேய்ப்போம். தினமும் நன்கு உடலைச் சுத்தம் செய்து குளிப்போம்.

சென்ற வார கேள்விகளுக்கான பதில்கள்

1. (A) கிருமிகள் பரவும் 2. (C) சுத்தமாக 3. (B) வீட்டுப்பாடம்



1. இருமும்போது என்ன செய்ய வேண்டும்..?
   A. மேலே பார்க்கவும் B. கீழே பார்க்கவும் C. மூடிக்கொண்டு இருமவும்
2. ஈக்கள் மொய்த்த உணவைச் சாப்பிடலாமா..?
   A. சாப்பிடலாம் B. சாப்பிடக் கூடாது C. கொஞ்சம் சாப்பிடலாம்
3. சமைத்த உணவை எப்படிச் சாப்பிட வேண்டும்..?
   A. மூடிவைத்து B. சூடாக C. ஆறிய பின்னர்

மேலே கண்ட மூன்று கேள்விகளுக்கான பதிலை அனுப்பும் முறை

- 9940699401 என்ற வாட்ஸ்அப் எண்ணிற்கு SSQUIZ என்று டைப் செய்து, ஒரு மெஸேஜ் அனுப்பவும்.
- உங்களைப் பற்றிய விவரங்கள் கேட்கப்படும். தொடர்ந்து திரையில் வரும் கேள்விகளுக்கு சரியான பதிலை அளித்து, சிறப்புப் பரிசினைப் பெறுங்கள். வாழ்த்துகள்!

விடுபட்ட படத்தை நிரப்புங்கள்...



படத்தில் விடுபட்டுள்ள இடங்களை அருகிலுள்ள சரியான இடங்களின் எண்களைக் குறிப்பிட்டு நிரப்புங்கள்...





QR Code-ஐ ஸ்கேன் செய்து சுகாதார விழிப்புணர்வு பாடல்களைக் கண்டும், கேட்டும் மகிழுங்கள்.